# துவாக்குடி நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of Council</th></tr>
<tr><td>07.08.2017</td><td></td><td>2017ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07–ம் தேதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க கூட்டம் நடைபெறும்.<br><br>தனி அலுவலர்,<br>துவாக்குடி நகராட்சி.</td><td></td></tr>
<tr><td>07.08.2017</td><td>66</td><td><u>பொருள் எண். 1</u><br><br>2017–18ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி (TURIP 2017–18) திட்டத்தின் கீழ் பழுதடைந்த தார் சாலைகளை புதுப்பிக்கவும் மற்றும் புதிதாக தார்சாலைகள் அமைக்கவும் கீழ்கண்ட பணிகளுக்குரிய மதிப்பீடுகள் தயார் செய்து மான்யம் பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வார்டு எண்</th><th>சாலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>5</td><td>ராவுத்தாண்மேடு பிள்ளையார் கோவில் முதல் திருவள்ளுவர் நகர் பாலம் வரை மற்றும் திருவள்ளுவர் நகர் மெயின்சாலை, பெல்நகர் திரு.வி.க தெரு மற்றும் 26–வது குறுக்குத்தெரு</td><td>39.00</td></tr>
<tr><td>2</td><td>8</td><td>வ.உ.சி நகர் சாலை எண்.2, 3, 4 மற்றும் குறுக்குத் தெருக்கள்</td><td>61.00</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>100.00</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். / இ1 / 2017</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 07.08.2017 | 67 | **<u>பொருள் எண். 2</u>**<br>இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் ஒப்பந்த அடிப்படையில் கட்டி தர அனுமதி கோரி கீழ்கண்ட விவரப்படியான நபர்களிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.<br>1. என். ஜவஹர், த/பெ. நம்மாழ்வார்,<br>2/1999, ஜவஹர் ஹடன் ஹவுஸ்,<br>பைபாஸ்ரோடு, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்<br>2. எம். ஜம்புலிங்கம்,<br>12/28, வடக்கு 4—ம் வீதி, புதுக்கோட்டை.<br>மேற்படியான நபர்களுக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர்கழிப்பிடம் கட்டும் பணிக்கு மட்டும் ஒப்பந்ததாரராக செயல்படவும், கழிப்பிடம் கட்டி முடித்தபின் மான்யத் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1226 / எச்1 / 2016** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 07.08.2017 | 68 | **<u>பொருள் எண். 3</u>**<br>இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட புள்ளி விவரங்களை 2013 முதல் 16 புத்தகங்கள் பைண்டிங் செய்தமைக்கு தொகை ரூ. 3050/— மட்டும் ஸ்ரீ பிளக்ஸ் நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 112 / எச்1 / 2016** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 07.08.2017 | 69 | **<u>பொருள் எண். 4</u>**<br>இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் உள்ளாட்சி அமைப்பு பகுதிகளிலுள்ள தெருக்களில் சேரும் குப்பை கழிவுகள், மகால்கள், சந்தை மற்றும் பேரூந்து நிலையங்களில் சேரும் திடக்கழிவுகளை அகற்றுதல் மழைநீர் வடிகால்கள் தேங்கும் அமைப்புகளை நீக்குதல் போன்ற அத்தியாவசிய அடிப்படைப் பணிகளை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு பொது மக்களின் சுகாதாரத்திற்காக செய்து வருவாதல் அடிக்கடி உடல்நலக்குறை ஏற்படுவதால் இந்நகராட்சி பங்களிப்புடன் சிறப்பு ஆயுள் காப்பீடு திட்டத்தை செயல்படுத்த அரசை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்க இந்நகராட்சியின் பங்களிப்புடன் சிறப்பு ஆயுள் காப்பீடு திட்டத்தை செயல்படுத்த அரசை கோருவது என தீர்மானிக்கலாம்.<br>**ந.க.எண். 888 / எச்1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 07.08.2017 | 70 | **<u>பொருள் எண். 5</u>**<br><br>திருமதி. சி. வளர்மதி மேலாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு படி மேலூர் நகராட்சியிலிருந்து துவாக்குடி நகராட்சிக்கு பணி மாறுதலில் வரப்பெற்றமைக்கு பணி மாறுதல் பயணப்படி தொகை ரூ. 4825/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அ.கு:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>ந.க.எண். 422 / இ1 / 2017</u>** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

______________ X ______________